[9th November 1965

cuts due to unprecedented heavy rain inclusive of the heaviest downpour of rainfall during the period 15th May 1961 to 16th June 1961 in the past 34 years. Hence R.C.C. Boxes and protective works were constructed to avoid recurring expenditure in future. No provision had been made for this in the original estimate.

(ii) The soils met with during execution were found to be of higher classification than those anticipated and provided for in the original estimate.

(iii) Increase in the length of main canal from 9 miles 4 furlongs to 13 miles 2 furlongs and 200 feet thereby extending the canal by 3 miles 6 furlongs and 200 feet.

(iv) Increase in the number of cross drainage works due to the undulating terrain of the country.

(v) In the original estimate, provision was made for acquisition of 183 acres of land at a flat rate of Rs. 1,500 whereas an extent of 387 acres was found necessary and the cost of the lands varied from Rs. 2,500 to Rs. 3,500 per acre during execution.

(vi) Increase in the length of distributaries from 13½ miles as provided in the original estimate to 21 miles in the revised estimate which consequently increased the cost of expenditure of the channel and cross drainage works.

(vii) Increase in the number of sluices, quarters for the field staff and establishment charges.

Reasons for the difference between the revised estimate and actual expenditure.—(i) More depreciation charges than anticipated towards the cost of machineries, transferred after the completion of the projects were entailed.

(ii) Excavation of field bothies channels up to 50 acres limit instead of 150 acres as contemplated in the estimate is necessary. Moreover, the provision in the estimate is made only as a L.S. provision as against the actual requirements, which can be worked out only on field conditions being brought out in execution.

APPENDIX V.

[*Vide* answer to starred question No. 160 on pages 69–70.]

1964 டிஸம்பரில் இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கம் அளித்த உதவி பற்றிய விவரம்—

(i) வலைகள் வழங்குதல் : (i) வலைகள் இழந்த மீனவர் ஒவ்வொருவருக்கும் அல்லது பழுது பார்க்க இயலாத அளவில் வலைகள் சேதமடைந்துள்ள மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் (தோராயமாக ரூ. 900 விலையுள்ள) 25 கிலோ கிராம் நைலான் நூல்

வழங்கப்படும். ஐம்பது சத விதம் கடன், 50 சதவிதம் உதவித் தொகை என்ற அடிப்படையில் இது வழங்கப்படும். இந்த கடன் தொகை 5 ஆண்டுக் கால அளவில் 50 மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

(ii) பருத்தி வலைகளை இழந்த மீனவர்களில் யாராவது இப்போது நைலான் வலைகளை விரும்பினால் மேலே, துணை பாரா (1)-ல் குறிப்பிட்டுள்ள சலுகைகளைப் பெற அவர் அனுமதிக்கப் படுவர்.

(iii) பருத்தி வலைகளை மட்டுமே விரும்பும் மீனவர்களுக்கு அதிக அளவு ரூ. 300 மதிப்புள்ள பருத்தி நூல் வழங்கப்படும். இது பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் வழங்கப்படும். கடன் பகுதி 3 ஆண்டுக் கால அளவில் 30 மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

(iv) வலைகளைப் பழுதுபார்ப்பதற்காக 10 கிலோ கிராம் நைலான் அல்லது ரூ. 100 மதிப்புள்ள பருத்தி வழங்கப்படும். இது 50 சதவிதம் கடன், 50 சதவிதம் மானியம் என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் 2 ஆண்டுக் கால அளவில் 20 தவணைகளில் வசூலிக்கப்படும்.

(v) வலைகளைப் பழுது பார்ப்பதற்காக வழங்கப்படும் நைலான் அல்லது பருத்தியின் மதிப்பு ரூ. 50 அல்லது அதற்குக் குறைவாக இருக்கும்போது முழுத்தொகையும் மானியமாகக் கொடுக்கப்படும்.

(vi) வலைகள் சம்பந்தப்பட்ட உதவியானது ரொக்கமாகக் கொடுக்கப்படாமல் நைலான் அல்லது பருத்தி நூல் வடிவத்தில் மட்டுமே கொடுக்கப்படும். தனி நபர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, கூட்டுறவுச் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோரின் உதவியுடன் மீனளத்துறை அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நூல் வழங்கப்படும்.

II. படகுகள் வழங்குதல்: ( ) படகுகளை இழந்த மீனவர் ஒவ்வொருவருக்கும் அல்லது பழுதுபார்ப்பதற்கு இயலாத அளவில் படகுகள் சேதமடைந்துள்ள மீனவர் ஒவ்வொருவருக்கும் அதிக அளவு உதவியாக ரூ. 2,000 கொடுக்கப்படும். இது 50 சதவிதம் மானியம், 50 சதவிதம் கடன் என்ற அடிப்படையில் கொடுக்கப்படும்.

(ii) ஒரு மீனவர் தானே படகைக் கட்டிக் கொள்ள தயாரா யிருந்தால், கடன் கொடுக்கப்படுவதற்கு அவர் நம்பகமானவரா என்கிற விவரங்களை விசாரித்து அறிந்த பிறகு மேலுள்ள துணை பாரா (1)-ல் குறிப்பிட்டுள்ளபடி நிதி உதவி அளிக்கப்படும். கடன் தொகை கீழ்க்கண்டுள்ளபடி தவணைகளில் பட்டுவாடா செய்யப்படும்.

(1) படகு கட்டும் பொருள்களை மீனவர் வாங்கி கட்டுமான வேலையைத் துவக்கியவுடன் (படகுக் கட்டுவதற்கு ஆகும் மொத்தச் செலவில் 50 சதவீதமான) கடன் தொகை முழுவதும் அவருக்கு அளிக்கப்படும்.

(2) படகு கட்டும் வேலை முடிந்து நம்பர் போடுவதற்கு அதைக் கொண்டுவரும்போது (படகு கட்டுவதற்கு ஆகும் மொத்தச் செலவில் எஞ்சிய 50 சதவீத) மானியத் தொகை முழுவதும் அளிக்கப்படும்.

(iii) பத்து ஆண்டுகால அளவில், 100 மாதாந்திரத் தவணை களில் கடனை திருப்பிச் செலுத்துவதற்காக தக்க படிவத்தில் ஒப்பந்தம் எழுதி வாங்கப்படும்.

(iv) மட்டரகப் படகை இழந்து, உயர்ந்த ரகப் படகைக் கட்டிக்கொள்ள விரும்பும் மீனவர்களுக்கும் நிதி உதவி அளிக்கப் படும். இந்த நிதி உதவி, ஆரம்பத்தில் அவருக்குச் சொந்த மாயிருந்த படகின் மதிப்பில் பாதியும் ரூ. 1,000-வரை கடனும் வழங்கப்படும். இது மேலுள்ள துணை பாரா (iii) -ல் கூறப் பட்டுள்ளபடி திருப்பி வசூலிக்கப்படும்.

(v) கேரளத்தில் மட்டுமே கிடைக்கக்கூடிய படகுகளை **(dug out canoes)** வாங்க விரும்பும் மீனவர்களுக்கு இந்தப் படகு களை வாங்கிக்கொள்ள அனுமதியளிக்கப்படும். இந்தப் படகு களுக்கு நம்பர் போடுவதற்காக அவற்றை மீனவளத் துறையின ரிடம் கொண்டு வந்து காட்டும்போது அவற்றின் மதிப்பு (மானியத் தொகை கடனும்) அவர்களுக்கு வழங்கப்படும்.

III. (i) **படகுகளைப் பழுது பார்த்தல்:** 50 சத வீதம் உதவித் தொகை, 50 சத வீதம் கடன் என்ற அடிப்படையில் அதிக அளவு ரூ. 750-வரை நிதி உதவி அளிக்கப்படும்.

(ii) பழுது பார்க்கும் வேலையை அந்தந்த மீனவரே செய்து கொள்ளவேண்டும். மீனவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு படகுகளில் சேதத்தையும், அவற்றைப் பழுது பார்ப்ப தற்கான செலவையும் மீனளத்துறை அதிகாரிகள் மேற்பார்வை யிட்டு, மதிப்பிட்டப் பின்னரே உதவித் தொகை நிச்சயிக்கப்படும்.

(iii) பழுது பார்ப்பதற்கான செலவு ரூ. 100 ஆகவும் அதற்குக் குறைவாகவும் மதிப்பிடப்படும்போது, அது மொத்த மானியமாக வழங்கப்படும். இச் செலவு ரூ. 100-க்கு மேலும் 200-க்குக் குறைந்தும் இருந்தால், கூடுதலான ரூ. 100 கடனைக் கருதப்பட்டு 2 ஆண்டு கால அளவில் 20 மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

(iv) இத் தொகை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படும். முறைப்படி ஒப்பந்தங்கள் பெறப்படும். அரசாங்க கடன் உதவி பெற்று பழுதுபார்க்கப்பட்ட படகுகள் தனியாகத் தொடர் வரிசையின்படி நம்பர் போடப்பட்டு, அவை கணிக்கப்பட்டு வரும்.

(v) படகுகள் கட்டுவதற்கும், பழுதுபார்த்தலுக்குமான கடன் தொகை 10 ஆண்டுகால அளவில், 100 மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படும். இவை அனைத்திலும் வழங்கப்பட்ட கடன்களுக்கு ஆண்டொன்றுக்கு 5¾ சத வீதம் வட்டி வாங்கப்படும்.

IV வழங்கப்பட்டதுயர் தணிப்புத் தொகையின் (amount of relief) விவரங்கள்.

வழங்கப்பட்ட துயர் தனிப்புத் தொகை குறித்த விரிவான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) ரொக்க மானியம் வழங்கல்.

அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒவ்வொரு மீனவருக்கும் ரூ. 50 என்ற விதத்தில் இலவச ரொக்க மானியம் வழங்கப்பட்டது. இவ்வாறு ராமநாதபுரம் மாவட்டத்தில் 3,582 மீனவர்களுக்கு ரூ. 1,79,100 வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 201 மீனவர்களுக்கு ரூ. 10,050 வழங்கப்பட்டது.

(ii) கரைவலை வழங்கல்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 184 மீனவர்களுக்கு மொத்தம் ரூ. 2,09,420.76 (ரூ. 71,020 உதவித் தொகையாகவும், ரூ. 1,38,400;76 கடனாகவும்) வழங்கப்பட்டது.

(iii) வலைகள் வழங்கவும், வலைகளைச் செப்பனிடுதலும்.

(நைலான், பருத்தி நூல் வலைகள்.)

வலைகளைச் செப்பனிடவும், புது வலைகளைப் பெறவும் ராமநாதபுரம் மாவட்டத்தில் 4,352 மீனவர்களுக்கு ரூ. 6,67,812.64 (ரூ. 3,79,064, 87 உதவித் தொகையாகவும், ரூ. 2,88,747.77 கடனாகவும்) வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 1,31,533.19 (ரூ. 68,551.19 உதவித் தொகையாகவும் ரூ; 62,989 கடனாகவும்) வழங்கப்பட்டது.

(iv) புதிய படகுகளை வழங்குதல்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 397 மீனவர்களுக்கு ரூ. 3,48,775 (ரூ. 1,55,745 உதவித் தொகையாகவும் ரூ. 1,93,030 கடனாகவும்) வழங்கப்பட்டது.

(v) சேதமடைந்த படகுகளைச் செப்பனிடுதல்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 2,20,795 (ரூ. 1,30,847.50 உதவித் தொகையாகவும், ரூ. 89,947.50 கடனாகவும்) வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 46,370 (ரூ. 29,500 உதவித் தொகையாகவும், ரூ. 16,870 கடனாகவும்) வழங்கப்பட்டது.